அன்புள்ள மேடம்,

நீங்கள் கர்ப்பமாக இருப்பதாக தெரிவித்த தகவலின்படி, நீங்கள் குழந்தைப் பெற செயின்-எட்-மார்ன் துறை தனது தாய் மற்றும் சேய் பாதுகாப்பு சேவைகளை நீங்கள் பெற ஆதரவு அளிக்கிறது.

கர்ப்பகால கண்காணிப்பு பல நிச்சய மருத்துவ பரிசோதனைகளை உள்ளடக்கியது:

- 4 ஆம் மாதத்தில் இருந்து, மாதம் ஒரு முறை மருத்துவர் அல்லது மருத்துவச்சியின் ஆலோசனையைப் பெற வேண்டும்.
- ஒரு காலாண்டிற்கு ஒரு முறை அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் எடுக்க வேண்டும்
- ஒரு ஆரம்பகால மகப்பேறுக்கு முந்தைய நேர்காணல் (EPP) மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆரம்பகால மகப்பேறுக்கு முந்தைய நேர்காணல் என்றால் என்ன?

- இது உங்கள் கர்ப்ப காலத்தில் உங்களுக்குத் தேவையான ஆதரவுகளைப் பற்றி விவாதிக்கும் ஒரு நேர்காணல் ஆகும், இதற்கு சுமார் 45 நிமிடங்கள் ஆகும். இது மருத்துவ பரிசோதனைகள் தொடர்பில்லாமல் எழும் அனைத்து கேள்விகளையும் நீங்கள் கேட்கக்கூடிய ஒரு முக்கியமான மற்றும் தனிப்பட்ட தருணமாகும்.
- இது ஒரு மருத்துவர் அல்லது மருத்துவச்சியின் பயிற்சியிடத்தில் அல்லது மருத்துவமனையில் நடத்தப்படலாம், இதில் நீங்கள் தனியாகவோ அல்லது ஜோடியாகவோ உங்கள் விருப்பத்தைப் பொறுத்து கலந்துகொள்ளலாம்.

உங்களுக்குச் சிகிச்சை அளிக்கும் சுகாதார நிபுணர் இந்த நேர்காணலை நடத்தவில்லை எனும்பட்சத்தில், எங்கள் துறையைத் தொடர்புகொள்ளலாம், அவர்கள்:

- உங்களுக்கு அருகிலுள்ள எங்கள் ஆலோசனை மையங்களில் ஒன்றில் நேர்காணலை ஏற்பாடு செய்வார்கள்
- நேர்காணலை வீட்டிலேயே நடத்துவார்கள்
- சேவை கிடைக்கவில்லை என்றால், ஒரு கூட்டாளரிடம் திருப்பி அனுப்புவார்கள்.

அதன்பின் உங்களுக்கு நேர்காணலின் அறிக்கை வழங்கப்படும், பின்னர் நீங்கள் விரும்பினால் அதை உங்கள் கர்ப்பத்தை கண்காணிக்கும் சுகாதார நிபுணர்கள் மற்றும் பிரசவத்தின்போது உங்களைக் கவனித்துக் கொள்ளும் குழுவுடன் பகிரலாம்.

நேர்காணல் முழுவதுமாக சமூகப் பாதுகாப்பின் வரையறையின் கீழ் இருக்கும். முன்கூட்டியே எந்த தொகையும் செலுத்தத் தேவையில்லை, கர்ப்ப காலத்தில் எந்த நேரத்திலும் நேர்காணல் நடத்தப்படலாம்.

தாய் மற்றும் சேய் பாதுகாப்பு வல்லுநர்கள் மற்றும் குடும்பக் கட்டுப்பாட்டு துறைகளின் பல்வேறு நடவடிக்கைகள் பற்றிய தகவல்களும் மற்றும் பிராந்திய பெரினாட்டல் கேர் திட்டத்தின் (DSRP) சிற்றேட்டில் ஆரம்பகால மகப்பேறுக்கு முந்தைய நேர்காணலை விளக்கும் ஆவணங்களும்  இணைக்கப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

மேலும் தகவல் அறிய அல்லது முன்பதிவு செய்ய எங்களை தொடர்புகொள்ள தயங்க வேண்டாம்:

மகப்பேறு மற்றும் குழந்தை பாதுகாப்பு மற்றும்
பாலியல் சுகாதாரத் துறை SPMI2S
மெயசன் டிபார்ட்மெண்டல் டெஸ் சாலிடரைட்ஸ் டி...
முகவரி
தொலைபேசி

QR குறியீடு